# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in


**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்:** 149/மா/2024

**நாள்: 19.12.2025**

கோ. கோவிந்தராஜ்
சென்னை --- முறையீட்டு மனுதாரர்

(1) மண்டல அலுவலர், மண்டலம்–9
பெருநகர சென்னை மாநகராட்சி

(2) The Proprietor,
M/s Narmadha Chain of
Restaurant, Chennai-34. --- எதிர்மனுதாரர்கள்

சென்னை–600 083, அசோக்நகர், 15–வது தெரு, கதவு எண் 22/43 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. கோ. கோவிந்தராஜ் என்பவரின் 27.08.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 27.08.2024 அன்று பெறப்பட்டு 149/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

சென்னை–600 083, அசோக்நகர், 15–வது தெரு, கதவு எண் 22/43 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. கோ. கோவிந்தராஜ் என்பவர் தனது 27.08.2024 நாளிட்ட முறையீட்டு மனுவுடன் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு 07.08.2024 நாளிட்டு அனுப்பியுள்ள மனுவில் கீழ்க்கண்ட புகார்களைத் தெரிவித்து, மாநகராட்சியில் நடவடிக்கை இல்லை என புகார் தெரிவித்துள்ளார்:-

> “கதவு எண் 10/21 பொன்னங்கிபுரம், 2–வது தெரு, நுங்கம்பாக்கம், சென்னை–34 முகவரியில் தளம் ஒன்றுக்கு 6,000 சதுரடி என நான்கு தளத்திற்கு மேல் Parking வசதிகள் இல்லாமல் வணிக கட்டிடம் கட்டப்பட்டது. கட்டிட உரிமையாளர் நடைபாதை மற்றும் சாலை ஆக்கிரமித்து சுமார் 20 அடி அகலம், 50 அடி நீளத்தில் Steps and Ramp அமைக்கப்பட்டதை புகார்கள் அளித்து இருமுறை ஆக்கிரமிப்புகளை அகற்றப்பட்டதை இம்மனுவுடன் இணைக்கப்பட்ட புகைப்படத்தில் காணலாம். சுமார் 2 மாதத்திற்கு முன் புதியதாக Narmada Andhra Style Restaurant ஒட்டல் துவங்கப்பட்டு ஒரு வழி சாலையில் வாகனங்களை நிறுத்தி மனித உயிர்களுக்கு தீங்குகள் ஏற்படும் வகையில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுத்தி வருவதால் மனுதாரர் ஆகிய நான் மற்றும் பொதுமக்கள் பாதிக்கப்படுகிறோம். இதனால் சென்னை மாநகராட்சி மண்டலம் 9 வருவாய் துறை அதிகாரி அவர்களுக்கு ஒட்டல் உரிமையாளர் முறையாக போக்குவரத்து காவல் துறை NOC பெற்று வந்து சென்னை மாநகராட்சி அதிகாரிகளிடம் ஒப்படைத்து ஒட்டல் துவங்க வருவாய் துறை Licence

வழங்கப்பட்டதா என்று கேள்வி எழுப்பி 10.06.2024 அன்று RTI மனு அளிக்கப்பட்டது. 08.07.2024 அன்று அளிக்கப்பட்ட பதில் மனுவில் ஓட்டலை மூட Notice அளிக்கப்பட்டுள்ளதாகவும் போக்குவரத்து காவல்துறை மாநகராட்சி அதிகாரிகளிடம் எவ்வித அனுமதியும் பெறவில்லை என்று அளிக்கப்பட்ட சான்றுகள் இம்மனுவுடன் இணைப்பு. ஆகவே இவ்வோட்டலை மூட இம்மனு மேல்முறையீடு செய்யப்படுகிறது.'' என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 24.09.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலரிடமிருந்து அறிக்கை பெறப்படாததால் 28.03.2025 நாளிட்ட நினைவுட்டு கடிதம் அனுப்பப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9–ன் மண்டல அலுவலரின் 17.04.2025 நாளிட்ட கடிதம் ம.அ. 9.வ.து. ந.க. எண் ஆர்3/0878/2025–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:

"08.07.2024 நாளிட்ட விண்ணப்பத்தில் கண்டுள்ளவாறு பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9, கோட்டம் 110ல் 21/10 பொன்னங்கிபுரம் 2வது தெரு, நுங்கம்பாக்கம், சென்னை–600 034 என்ற முகவரியில் இயங்கி வரும் Narmada Chain of Restaurant என்ற உணவகம் தொழில் உரிமம் கோரி விண்ணப்பம் பெறப்பட்டதன்னடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9, சுகாதாரத் துறையின் கருத்துரை கோரி 14.08.2024 மற்றும் 14.11.2024 நாளிட்ட கடிதங்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகர போக்குவரத்து காவல் துறை கூடுதல் ஆணையரின் கருத்துரையை கோரி கடிதங்கள் அனுப்பப்பட்டன. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9, சுகாதாரத் துறையின் 14.08.2024 மற்றும் 14.11.2024 நாளிட்ட கடிதங்களில் NARMADA CHAIN OF RESTAURANT என்ற உணவகத்திற்கு குறைகளை நிவர்த்தி செய்ய தாக்கீது வழங்கப்பட்டு, குறிப்பிட்ட காலத்திற்குள் குறைகளை நிவர்த்தி செய்யாமலும் அது குறித்து விளக்கம் ஏதும் அளிக்காத காரணத்தினால் உணவகத்திற்கு தொழில் உரிமம் வழங்க பரிந்துரைக்கப்படவில்லை (Not Recommended) என கருத்துரை பெறப்பட்டது.

மேலும் பெருநகர சென்னை மாநகர போக்குவரத்து காவல் துறை கூடுதல் ஆணையரின் 23.09.2024 மற்றும் 14.11.2024 நாளிட்ட கடிதங்களில், NARMADA CHAIN OF RESTAURANT என்ற உணவகத்திற்கு தொழில் உரிமம் வழங்க பரிந்துரைக்கப்படவில்லை (Not Recommended) என கருத்துரை பெறப்பட்டது.

NARMADA CHAIN OF RESTAURANT என்ற உணவகத்திற்கு தொழில் உரிமம் வழங்க பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல நல அலுவலர் மண்டலம்–09 சுகாதாரத் துறை அவர்களாலும் மற்றும் கூடுதல் ஆணையர் பெருநகர சென்னை போக்குவரத்து காவல் துறை அவர்களாலும் பரிந்துரைக்கப்படாத காரணத்தினாலும், தொழில் உரிமம் இன்றி செயல்படுவதாலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி விதி 114–ன்படி மேற்குறிப்பிட்ட உணவகத்திற்கு 24 மணி நேர தாக்கீது வழங்கி காவல் துறை பாதுகாப்புடன் கடையை 22.10.2024 அன்று மூடி அரக்கு முத்திரையிட்டு சீல் வைக்கப்பட்டது.

ஆனால், தனியரின் கடிதத்தில் வாயிலாக அரசு விதிகளின்படி ஓட்டல் நடத்துவதாகவும், இனிவரும் காலங்களில் எந்த விதியும் மீற மாட்டோம் என்றும் உறுதியளித்தார். மேலும், NARMADA CHAIN OF RESTAURANT உரிமையாளர் அவர்கள் உணவகம் அருகில் Valet parking என்ற இடத்தை ஏற்பாடு செய்து மீண்டும் தொழில் உரிமம் நடத்த அணுகினார். அதனடிப்படையில் மண்டலம் 09 சுகாதாரத் துறை

மற்றும் போக்குவரத்து காவல் துறை பரிந்துரை செய்து 13.11.2024 அன்று கடிதம் பெறப்பட்டது. கடிதம் வரப்பெற்றதன் அடிப்படையில் NARMADA CHAIN OF RESTAURANT என்ற உணவகத்திற்கு தொழில் உரிமம் வழங்கப்பட்டது.'' எனத் தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 18.11.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 30.10.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 18.11.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''கதவு எண் 10/21 பொன்னிங்புரம், 2வது தெரு, நுங்கம்பாக்கம், சென்னை–34 தளம் ஒன்றுக்கு 6000 சதுரடி என நான்கு தளத்திற்கு மேல் பார்க்கிங் வசதிகள் இல்லாமல் வணிக கட்டிடம் கட்டப்பட்டது. கட்டிட உரிமையாளர் நடைபாதை மற்றும் சாலை ஆக்கிரமித்து சுமார் 20 அடி அகலம் 50 அடி நீளத்தில் Steps and Ramp அமைக்கப்பட்டதை புகார்கள் அளித்து இருமுறை ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டதை இம்மனுவுடன் இணைக்கப்பட்ட புகைப்படத்தில் காணலாம். சுமார் 2 மாதத்திற்கு முன் புதியதாக Narmada Andhra Style Restaurant ஒட்டல் துவங்கப்பட்டு ஒரு வழி சாலையில் வாகனங்களை நிறுத்தி மனித உயிர்களுக்கு தீங்குகள் ஏற்படும் வகையில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுத்தி வருவதால், மனுதாரர் ஆகிய நான் மற்றும் பொதுமக்கள் பாதிக்கப்படுகிறோம். சென்னை மாநகராட்சி அதிகாரிகளிடம் ஒட்டல் துவங்க முறையாக வருவாய் துறை மூலம் licence வழங்கப்பட்டதா என்று RTI மனு அளிக்கப்பட்டது. அதற்கு 08.07.2024 அன்று அளிக்கப்பட்ட பதில் மனுவில் ஒட்டலை மூட notice அளிக்கப்பட்டதாகவும் போக்குவரத்து காவல்துறை மாநகராட்சி அதிகாரிகளிடம் எவ்வித அனுமதியும் பெறவில்லை என்று தகவல் தெரிவிக்கப்பட்டது. மேலும் விதி மீறி விளம்பர பலகைகள் நிறுவப்பட்டுள்ளன. ஆகவே, விதி மீறி இயங்கி வரும் மேற்கண்ட ஒட்டல் மீது சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

6. எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் முதுநிலை வருவாய் அலுவலர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு 18.11.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''மனுதாரர் குறிப்பிட்ட நர்மதா ஒட்டல் உரிமையாளரிடம் விளக்கம் கோரி தாக்கீது அனுப்பப்பபட்டதற்கு பதில் ஏதும் பெறப்படாததால் பெருநகர சென்னை போக்குவரத்து துறை அவர்களால் Narmada Chain of Restaurant என்ற உணவகத்திற்கு தொழில் உரிமம் வழங்க பரிந்துரைக்கப்படவில்லை.

இதனால் தொழில் உரிமம் இன்றி செயல்படுவதால் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி விதி 14ன்படி மேற்குறிப்பிட்ட உணவகத்திற்கு 24 மணி நேர தாக்கீது வழங்கி காவல்துறை பாதுகாப்புடன் கடையை 22.10.2024 அன்று மூடி அரக்கு முத்திரையிட்டு சீல் வைக்கப்பட்டது. Narmada Chain of Restaurant உரிமையாளர் அவர்கள் உணவகம் அருகில் Valet parking என்ற இடத்தை ஏற்பாடு செய்து மீண்டும் தொழில் உரிமம் நடத்த கோரியதன் அடிப்படையில் மண்டலம் 9 சுகாதாரத்துறை மற்றும் போக்குவரத்து காவல்துறைக்கு பரிந்துரை செய்து 13.11.2024 அன்று கடிதம் பெறப்பட்டது. அதனடிப்படையில் Narmada Chain of Restaurant என்ற உணவகத்திற்கு தொழில் உரிமம் வழங்கப்பட்டது என்று இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. உரிமம் பரிந்துரை செய்வது போக்குவரத்து காவல்

துறைக்கு சம்மந்தப்பட்டதாகும். பெருநகர சென்னை மாநகராட்சி நேரடியாக உரிமம் வழங்கவில்லை.

மனுதாரர் மேற்கண்ட ஒட்டல் நிறுவனத்தால் விளம்பர பலகை அமைக்கப்பட்டது பற்றி தன்னுடைய மனுவில் எதுவும் தெரிவிக்கவில்லை. தற்போது இன்று நடைப்பெற்ற விசாரணையில் மேற்கண்ட ஓட்டல் நிறுவனம் விளம்பர பலகை விதி மீறி வைக்கப்பட்டுள்ளது என்று புதிய புகாரினை தெரிவித்தார். இப்புகார் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9ன் பொறியியல் துறை சார்ந்ததாகும். எனவே பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9ன் மண்டல அலுவலருக்கு தெரியப்படுத்தி விளம்பர பலகை விதி மீறி அமைக்கப்பட்டிருப்பின் அது குறித்து உரிய துறையின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளவும், அதன் அறிக்கையை பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9ன் மண்டல அலுவலர் மூலம் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''

7. இரண்டாம் எதிர்மனுதாரர் M/s.Narmada Chain of Restaurant–ன் சார்பாக திரு.எஸ். ஸ்ரீநிவாசலு ஷெட்டி மற்றும் திரு. S. நூருல் இர்பான் ஆகியோர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 18.11.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

"திரு முகமது அலி என்பவர் பெங்களுரை தலைமையிடமாக கொண்டு M/s.Narmada Chain of Restaurant – ஆரம்பிக்கப்பட்டு அதன் கிளை சென்னை நுங்கம்பாக்கத்தில் இயங்கி வருகிறது. இவ் ஒட்டலில் மேற்குறிப்பிட்ட நாங்கள் கடந்த இரண்டு வருடங்களாக பணிபுரிந்து வருகிறோம்.

1) மனுதாரர் குறிப்பிட்டதற்கு மாறாக மேற்கண்ட ஒட்டலுக்கு Vallet Parking,வசதி செய்யப்பட்டுள்ளது.

2) முறையான ஒட்டல் உரிமம் தமிழ்நாடு அரசின் தொழிலாளர் துறையின் மூலம் பெறப்பட்டுள்ளது. அதன் Registration No.TNCHEAIL21CHECE-1-25-00448 ஆகும்.

3) தமிழ்நாடு அரசின்– Food Safety wing மூலம் Food Safety and Standards Authority of India Licence under FSS Act, 2006 –இன் கீழ் உரிய உரிமம் பெறப்பட்டுள்ளது. அதன் Licence No.12424002002472 ஆகும்.

4) பெருநகர சென்னை மாநகராட்சி வருவாய் துறை மூலம் தொழில் உரிமம் பெறப்பட்டுள்ளது. இந்த தொழில் உரிமத்தில் வரிசை எண்.3–ல் To display the name board of the trade in Regional Language, 5 : 3 : 2 Tamil, English and other languages respectively என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி ஒட்டலின் பெயர் பலகை வைக்கப்பட்டுள்ளது. விதி மீறல் ஏதுமில்லை.

மேலே குறிப்பிட்டுள்ளவற்றிற்கு உரிய நகல்களை இம்முறை மன்ற நடுவர் முன் சமர்ப்பிக்கின்றோம்.''

8. முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரர்களாகிய பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9–ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் முதுநிலை வருவாய் அலுவலரின் வாக்குமூலம் மற்றும் M/s Narmada Chain of Restaurant சார்பாக ஆஜரான பொறுப்பாளர்களின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

கதவு எண் 10/21, பொன்னிங்புரம், 2வது தெரு, நுங்கம்பாக்கம், சென்னை–34 தளம் ஒன்றுக்கு 6000 சதுரடி என நான்கு தளத்திற்கு மேல் பார்க்கிங் வசதிகள் இல்லாமல் வணிக கட்டிடம் கட்டப்பட்ட கட்டிடத்தின் உரிமையாளர் நடைபாதை மற்றும் சாலை

ஆக்கிரமிப்பு குறித்து புகார்கள் அளித்து இருமுறை ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது என்பதும், சுமார் 2 மாதத்திற்கு முன் புதியதாக Narmada Andhra Style Restaurant ஓட்டல் துவங்கப்பட்டு ஒரு வழி சாலையில் வாகனங்களை நிறுத்துவதால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு பொதுமக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதும், சென்னை மாநகராட்சி அதிகாரிகளிடம் ஓட்டல் துவங்க முறையாக வருவாய் துறை மூலம் licence வழங்கப்பட்டதா என்பதற்கு, போக்குவரத்து காவல்துறை மாநகராட்சி அதிகாரிகளிடம் எவ்வித அனுமதியும் பெறவில்லை என்பதால், ஓட்டலை மூட notice அளிக்கப்பட்டது என்பதும், மேலும் விதி மீறி விளம்பர பலகைகள் நிறுவப்பட்டுள்ளதால் மேற்கண்ட ஓட்டல் மீது சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் குறிப்பிட்ட நர்மதா ஓட்டல் உரிமையாளரிடம் விளக்கம் கோரி தாக்கீது அனுப்பப்பபட்டதற்கு பதில் ஏதும் பெறப்படாததால் பெருநகர சென்னை போக்குவரத்து துறை அவர்களால் Narmada Chain of Restaurant என்ற உணவகத்திற்கு தொழில் உரிமம் வழங்க பரிந்துரைக்கப்படவில்லை என்பதும், இதனால் தொழில் உரிமம் இன்றி செயல்பட்டதால் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி விதி 14ன்படி மேற்குறிப்பிட்ட உணவகத்திற்கு 24 மணி நேர தாக்கீது வழங்கி காவல்துறை பாதுகாப்புடன் கடையை 22.10.2024 அன்று மூடி அரக்கு முத்திரையிட்டு சீல் வைக்கப்பட்டது என்பதும், Narmada Chain of Restaurant உரிமையாளர் உணவகம் அருகில் Valet parking என்ற இடத்தை ஏற்பாடு செய்து மீண்டும் தொழில் உரிமம் நடத்த கோரியதன் அடிப்படையில் மண்டலம் 9 சுகாதாரத்துறை மற்றும் போக்குவரத்து காவல்துறை பரிந்துரை செய்ததின் அடிப்படையில் Narmada Chain of Restaurant என்ற உணவகத்திற்கு தொழில் உரிமம் வழங்கப்பட்டது என்பதும், உரிமம் பரிந்துரை செய்வது போக்குவரத்து காவல் துறைக்கு சம்மந்தப்பட்டதால், பெருநகர சென்னை மாநகராட்சி நேரடியாக உரிமம் வழங்கவில்லை என்பதும், மனுதாரர் மேற்கண்ட ஓட்டல் நிறுவனத்தால் விளம்பர பலகை அமைக்கப்பட்டது பற்றி தன்னுடைய மனுவில் எதுவும் தெரிவிக்காமல், 18.11.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் மேற்கண்ட ஓட்டல் நிறுவனம் விளம்பர பலகை விதி மீறி வைக்கப்பட்டுள்ளது என்ற புதிய புகார் தெரிவித்து இருப்பது பற்றி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9ன் பொறியியல் துறைக்கு தெரியப்படுத்தி விளம்பர பலகை விதி மீறி அமைக்கப்பட்டிருப்பின் அது குறித்து உரிய துறையின் மூலம் நடவடிக்கை மேற்கொண்டு, அதன் அறிக்கையை பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9ன் மண்டல அலுவலர் மூலம் இம்முறைமன்றத்திற்கு சமர்ப்பிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் முதுநிலை வருவாய் அலுவலரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் குறிப்பிட்டதற்கு மாறாக மேற்கண்ட ஓட்டலுக்கு Vallet Parking,வசதி செய்யப்பட்டுள்ளது என்பதும், முறையான ஓட்டல் உரிமம் தமிழ்நாடு அரசின் தொழிலாளர் துறையின் மூலம் பெறப்பட்டுள்ளது என்பதும், தமிழ்நாடு அரசின்– Food Safety wing மூலம் உரிய உரிமம் பெறப்பட்டுள்ளது என்பதும், பெருநகர சென்னை மாநகராட்சி வருவாய் துறை மூலம் தொழில் உரிமம் பெறப்பட்டுள்ளது என்பதும், இந்த தொழில் உரிமத்தில் வரிசை எண்.3–ல் To display the name board of the trade in Regional Language, 5 : 3 : 2 Tamil, English and other languages respectively என்று குறிப்பிடப்பட்டுள்ளதன்படி ஓட்டலின் பெயர் பலகை வைக்கப்பட்டுள்ளது என்பதும், இதில் விதி மீறல் ஏதுமில்லை என்பதும் இரண்டாம் எதிர்மனுதாரரான Narmada Chain of Restaurant என்ற உணவகத்தின் பொறுப்பாளர் மற்றும் மேலாளர் ஆகியோரின் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9 சுகாதாரத்துறை மற்றும் போக்குவரத்து காவல்துறை பரிந்துரை செய்யப்பட்டதின் அடிப்படையில் Narmada Chain of

Restaurant என்ற உணவகத்திற்கு தொழில் உரிமம் வழங்கப்பட்டது என்பதும், மனுதாரர் மேற்கண்ட ஓட்டல் நிறுவனத்தால் விதி மீறி விளம்பர பலகை வைக்கப்பட்டது என்ற புகார் குறித்து, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9ன் மண்டல அலுவலருக்கு தெரியப்படுத்தி விளம்பர பலகை விதி மீறி அமைக்கப்பட்டிருப்பின் அது குறித்து உரிய துறையின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரியபடுத்திருந்தாலும், எதிர்மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட தொழில் உரிமத்தில் வரிசை எண்.3–ல் To display the name board of the trade in Regional Language, 5 : 3 : 2 Tamil, English and other languages respectively என்று குறிப்பிடப்பட்டுள்ளதுபடி ஒட்டலின் பெயர் பலகை வைக்கப்பட்டுள்ளது என்று Narmada Chain of Restaurant–ன் பொறுப்பாளர் மற்றும் மேலாளர் ஆகியோரின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் முதுநிலை வருவாய் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் பொறியியல் துறை, M/sNarmada Chain of Restaurant சமர்ப்பித்துள்ள தொழில் உரிமத்தில் வரிசை எண் 3ல் குறிப்பிட்டுள்ளவாறு விளம்பரப் பலகை அமைக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து கள ஆய்வு செய்து அதனடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்க, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் மண்டல அலுவலருக்கு, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்கள் உத்திரவிடுமாறு, இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள்19–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

(1) திரு. கோ. கோவிந்தராஜ்,
எண் 22/43, 15வது தெரு,
அசோக் நகர், சென்னை–600 083.

(2) ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

(3) மண்டல அலுவலர், மண்டலம் 9,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண்.1 லேக் ஏரியா, 4குறுக்கு தெரு,
நுங்கம்பாக்கம், சென்னை–600 034.

(4) The Proprietor,
M/s Narmada Chain of Restaurant,
No.21/10, Ponnanigipuram,
Ambal Nagar,
Nungambakkam, Chennai-600 034.

(5) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

24/12/25
செயலாளர்

24/12/25 1/10

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை–600 032